நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 256/2024

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருநாவுக்கரசு |
| தந்தை / கணவர் பெயர் | : | பாலகிருஷ்ணன் |
| கிராமம் | : | கணக்குபட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW3** |
| வயது | : | 35 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 06–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.05PM

1. நான் தற்போது பழக்காரனூரில் குடியிருக்கிறேன். நான் டைலராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அம்மா. அ.சா.2 என்னுடைய அண்ணன். எங்களுக்கும் எதிரிகள் குடும்பத்தாருக்கும் காட்டு பிரச்சனை இருந்து வருகிறது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு காலை 09.30 மணியளவில்

காட்டிற்கு மாடு மேய்க்க சென்றார். எதிரிகள் காட்டில் பூண்டு, புல் ஆகியவற்றை பிடுங்கி கொண்டிருந்தார்கள்.

2. என் அம்மா எதிரிகளிடம் கோர்ட்டில் வழக்கு இருக்கும்போது எதற்காக பூண்டை பிடிங்கி எடுக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு எதிரி குமுதவள்ளி என் அம்மாவை அப்பாடி தாண்டி தேவடியா பிடுங்குவோம் என்று கையால் என் அம்மாவின் முதுகில் அடித்து விட்டார். என் அம்மா கீழே விழுந்து விட்டார்.
3. எதிரி சேதுவராயன் என் அம்மாவை காலால் அல்லையில் எட்டி உதைத்தார். சண்டையை தடுக்க சென்ற என் அண்ணன் ராமலிங்கத்தை எதிரி சேதுவராயன் கட்டு கம்பியால் என் அண்ணனின் முன் மற்றும் பின் கழுத்தில் அடித்துவிட்டார். தமிழ்செல்வன் மற்றும் நானும் சண்டையை தடுத்தோம். பிறகு கார் மூலமாக எனது அம்மாவையும், எனது அண்ணன் ராமலிங்கத்தையும் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தோம். தமிழ்செல்வன் எனது அம்மாவையும், என் அண்ணையும் அடிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–** 12.15 PM

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (விசாரணை ஆரம்பிக்க பட்ட நேரம்** 12.40 PM

1. 1 ம் எதிரி குமுதவள்ளி என்பவரின் கணவர் வரதராஜன் என்பவரை எனக்கு தெரியும். 30 வருடங்களுக்கு முன்பிருந்து வரதராஜன் என்பவர் எனது தாத்தாவுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை பொருத்து குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்தார் என்றாலும், அவரது இறப்புக்கு பின்னிட்டு எதிரிகள் அவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தற்போது விவசாயம் செய்து வருகிறார்கள் என்றாலும் அதுப்பற்றி எனக்கு தெரியாது.
2. எதிரிகள் புல், பூண்டு புடுங்கி கொண்டிருந்ததாக சொன்ன நிலம் குட்டப்பட்டி கிராமம், சர்வே எண். 362/2,3, 367/3A, ஆகிய நிலங்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் புல், பூண்டு புடுங்கி கொண்டிருந்த நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. அதற்கான பட்டா யாருடைய பெயரில் உள்ளதென்று எனக்கு தெரியாது.
3. வரதராஜன் இறந்து சுமார் 4 வருடங்கள் இருக்கும். மேற்படி எதிரிகள் அனுபவத்தில் இருக்கும் நிலத்தை அனுபவம் செய்வதில் நானும், எனது

தாயாரும் இடையூறு செய்யகூடாது என்று மாவட்ட உரிமையயில் நடுவர் நீதிமன்றத்தில் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலத்தில் எதிரிகள் ஆழ்குழாய் கிணறு அமைத்து அதன் அருகில் அட்டை வீடு போட்டு குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். ஆனால் கிணறு இருப்பது பற்றி எனக்கு தெரியாது.

4. அந்த நிலத்தில் தான் எதிரிகள் விவசாயம் செய்யகூடாது என்று எனது அம்மா அடிக்கடி அங்கு சென்று பிரச்சனை செய்ததில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை செய்தார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 04.07.2022 ம் தேதி காலை 09.30 மணிக்கு எதிரிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் அவர்கள் புல், பூண்டு பிடுங்கி கொண்டிருந்தபோது புடுங்ககூடாது என்று சொல்லியும், அந்த இடத்தில் மாடுகளை மேய்க்க பிடித்துக்கொண்டு சென்றார் என்றாலும் சரிதான்.

5. அப்போது நானும், எனது தாயாரும் என்னுடைய சகோதரர் ராமலிங்கம், என்னுடைய மாமா மகன் பெரியண்ணன் ஆகியோர் எதிரிகளை அவர்கள் நிலத்தை ஓட்டகூடாது என்றும், புல்பூண்டு புடுங்க கூடாது என்றும் அடித்து தகராறு செய்தது சம்மந்தமாக குற்ற எண். 177/2022 என்ற வழக்கு நங்கவள்ளி காவல் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான்.

6. மேற்படி நிலம் எனது தாத்தா பெயரில் உள்ளது. அந்த நிலத்தில் எனக்கு உரிமை இருப்பதாக என்னிடம் பட்டா எதுவும் இல்லை. நான் மேலே சொன்ன நிலத்துக்கான பட்டா வரதராஜன் பெயரில் இருந்ததை அவர் இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான எதிரிகளின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் இன்றைய தேதி வரை எதிரிகள் தான் அந்த நிலத்தில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் எனது அம்மாவும் நானும் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சொல்லி அடிக்கடி அங்கு சென்று நிலத்தில் விவசாயம் செய்யகூடாது என்று பிரச்சனை செய்து வருகிறோம் என்றாலும் சரியல்ல.

7. 04.07.2022 ம் தேதி நானும், எனது தாயாரும் என்னுடைய சகோதரர் ராமலிங்கம், என்னுடைய மாமா மகன் பெரியண்ணன் ஆகியோர் எதிரிகள் நிலத்தை உழவடை செய்வதற்காக சுத்தம் செய்துக்கொண்டிருந்தபோது எதிரிகளை

உழவடை செய்யவிடாமல் தடுத்து அடித்து காயம் செய்தோம் என்றும், அது சம்மந்தமாக எதிரிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அந்த வழக்கில் இ ருந்து தப்பிக்க வேண்டி எதிரிகள் எங்களை தாக்கியதாக பொய்யான புகார் அளித்து நானும், எனது தாயாரும் பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றாலும் சரியல்ல.

8. எனக்கு மேற்படி நிலத்தின் பட்டா எதிரிகள் பெயரில் தான் உள்ளதென்றும், அந்த நிலம் எதிரிகளின் அனுபவத்தில் தான் உள்ளதென்றும் எனக்கு தெரியும் என்றாலும் அந்த நிலத்திலிருந்து எதிரிகளை வெளியேற்றுவதற்காக நடக்காத ஒரு சம்பவத்தை குறிப்பிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அடிக்கடி பிரச்சனை செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.
9. நாங்கள் தான் அந்த நிலத்தில் அத்துமீறி நுழைந்து பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. அது எனது மாமாவுக்கு சொந்தமான நிலம். நான் சொன்னவாறு எதிரிகள் என்னையோ, எனது தாயாரையோ, எனது சகோதரரையோ அடிக்கவில்லை என்றாலும், நாங்கள்தான் எதிரிகளை அடித்து விட்டு அவர்கள் மீது பொய்புகார் அளித்துவிட்டோம் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.00PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**